செ.வெ.எண்:49 நாள்: 26.01.2020

## கிருஷ்ணகிரி மாவட்ட விளையாட்டு அரங்கில் 71 வது இந்திய குடியரசு தினவிழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் சு.பிரபாகர், இ.ஆ.ப., அவர்கள் தேசிய கொடியை ஏற்றிவைத்து காவல்துறை அணிவகுப்பு மரியாதை ஏற்றுக்கொண்டார்.

## 270 பயனாளிகளுக்கு ரூ.1 கோடியே 49 லட்சத்து 43 ஆயிரத்து 081 மதிப்பில் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 71-வது இந்திய குடியரசு தினவிழா மாவட்ட விளையாட்டு அரங்கில் இன்று சிறப்பாக நடைபெற்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் சு.பிரபாகர்,.இ.ஆ.ப., அவர்கள் தேசியக் கொடியை ஏற்றிவைத்து காவல்துறை, தீயணைப்புத்துறை, ஊர்காவல்படை, நாட்டுநலப்பணித்திட்டம், தேசிய மாணவர் படை ஆகியோர் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார். பின்னர் 36 சுதந்திர போராட்ட தியாகிகளுக்கு பொன்னாடை அணிவித்து, நினைவுப்பரிசுகள் வழங்கி கௌரவித்தார். மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.பண்டிகங்காதர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.எஸ்.சாந்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாண்புமிகு தமிழக முதல்வரின் காவல் பதக்கங்கள் 46 காவலர்களுக்கு பதங்கங்களை வழங்கினார். பின்னர் முன்னாள் படைவீரர் நலத்துறை சார்பில் 3 பயனாளிகளுக்கு ரூ.55 ஆயிரத்து 462 மதிப்பிலும், வருவாய்த்துறை மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை சார்பில் 191 பயனாளிகளுக்கு ரூ.27 இலட்சத்து 12 ஆயிரம் மதிப்பிலும், மாற்றுத் திறனாளிகள் நலத்துறை சார்பில் 3 பயனாளிகளுக்கு ரூ.1 இலட்சத்து 69 ஆயிரத்து 200 மதிப்பிலும், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை சார்பில் 10 பயனாளிகளுக்கு ரூ.46 ஆயிரத்து 710 மதிப்பலும், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் 9 பயனாளிகளுக்கு ரூ.22 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பிலும், தாட்கோ சார்பில் 3 பயனாளிகளுக்கு ரூ.13 இலட்சத்து 70 ஆயிரத்து 530 மதிப்பிலும், மாவட்ட தொழில் மையம் சார்பில் 5 பயனாளிகளுக்கு ரூ.69 இலட்சம் மதிப்பிலும், மகளிர் திட்டம் சார்பில் 30 பயனாளிகளுக்கு ரூ.7 இலட்சத்து 47 ஆயிரத்து 422 மதிப்பிலும், தோட்டக்கலைத்துறை சார்பில் 9 பயனாளிகளுக்கு ரூ.5 இலட்சத்து 62 ஆயிரத்து 707 மதிப்பிலும், வேளாண்மைத்துறை சார்பில் 7 பயனாளிகளுக்கு ரூ.1 இலட்சத்து 29 ஆயிரத்து 050 மதிப்பிலான காசோலைகள் மற்றும் நலத்திட்ட உதவிகள் என மொத்தம் 270 பயனாளிகளுக்கு ரூ.1 கோடியே 49 இலட்சத்து 43 ஆயிரத்து 081 மதிப்பில் நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழஙகினார்.

மேலும் மாவட்டத்தில் சிறப்பாக பணியாற்றிய பல்வேறு துறை சார்ந்த அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் சு.பிரபாகர்,இ.ஆ..ப.,அவர்கள் பாராட்டிப் பரிசுகளை வழங்கினார்.

இவ்விழாவில் கலை நிகழ்ச்சி நடத்திய மாருதி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி கிருஷ்ணகிரி, புனித அன்னாள் மகளிர் மேல்நிலைப்பள்ளி கிருஷ்ணகிரி, அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி கிருஷ்ணகிரி, டிரினிடி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி கிருஷ்ணகிரி, டான்போஸ்கோ மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி கிருஷ்ணகிரி, நாளந்தா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி கிருஷ்ணகிரி, அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி காவேரிப்பட்டிணம், அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி சூளகிரி, அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி காவேரிப்பட்டிணம் ஆகிய 9 பள்ளிகளை சேர்ந்த 1530 மாணவ மாணவியர்களின் கலை நிகழ்ச்சி நடத்தப்பட்டது. பின்பு கலைநிகழ்சியில் கலந்துக் கொண்ட பள்ளிகளுக்கு நினைவு பரிசுகளை வழங்கி பாராட்டுகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர்.செல்லக்குமார், கிருஷ்ணகிரி சட்டமன்ற உறுப்பினர் திரு.டி.செங்குட்டுவன், ஊத்தங்கரை சட்டமன்ற உறுப்பினர் திருமதி.மனோரஞ்சிதம் நாகராஜ், பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.சி.வி.இராஜேந்திரன், மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் திருமதி.மணிமேகலை நாகராஜ், ஒன்றிய குழுத்தலைவர் திருமதி.ஆர்.அம்சா ராஜன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.ராமமூர்த்தி, கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் திருமதி. தெய்வநாயகி, ஊரக வாழ்வாதார திட்ட இயக்குநர் திருமதி. உமாமகேஷ்வரி, உதவி ஆணையர் ( ஆயம்) திரு.முரளி, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் திரு.அமீர் பாஷா, துணை காவல் கண்காணிப்பாளர்கள் திரு.குமார், திரு.ராஜேந்திரன், தனி ஆட்சியர்(சமூக பாதுகாப்பு திட்டம்) திரு.குணசேகரன், மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.கனகராஜ், முதன்மை கல்வி அலுவலர் திரு.முருகன், வட்டாட்சியர்கள் திரு. ஜெய்சங்கர், திரு.பிரதாப், திரு.வெங்கடேசன், மாவட்ட கல்வி அலுவலர் திருமதி.கலாவதி, அலுவலக மேலாளர் திரு.கிருஷ்ணமூர்த்தி மற்றும் அனைத்துத்துறை உயர் அலுவலர்களும் கலந்துக் கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**கிருஷ்ணகிரி**